**செய்தி வெளியீடு எண்:705** **நாள்: 23.10.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் இளந்தமிழர் இலக்கியப் பட்டறை இக்கால மாணவர்களுக்காகவும் வருங்கால இளந்தலைமுறையினருக்காகவும் உருவாக்கப்பட்ட மாபெரும் இந்த வெற்றித் திட்டம் 2012ஆம் ஆண்டு முதன்முதலாக 100 பேரோடு ரூபாய் 10 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டு மாணவர்களிடத்தும் பெற்றோர்களிடத்தும் பெரும்வரவேற்பை பெற்றதனையடுத்து இரண்டாம் ஆண்டு முதல் 200 பேரைக் கொண்டு ரூபாய் 20 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிற்கான (ஆறாம் ஆண்டு) இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப்பட்டறை சென்னை, தரமணியில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இன்று 23.10.2017 காலை 08.30 மணியளவில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இப்பயிற்சிப் பட்டறை 23.10.2017 முதல் 29.10.2017 வரை நடைபெறவுள்ளது. இப்பயிற்சிப் பட்டறையில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தமிழ் வளர்ச்சித்துறையின் தமிழ் மன்றம் சார்பில் 2016–17ஆம் ஆண்டில் கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் நடத்தப்பெற்ற கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் முதல், இரண்டாம் பரிசு பெற்ற மாணவர்கள் மற்றும் மாநில அளவில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்கள் என சுமார் 200 பேர் பங்கேற்றுள்ளனர்.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் இப்பயிற்சிப் பட்டறையை குத்து விளக்கு ஏற்றித் தொடங்கி வைத்தும் பங்கு பெற்ற மாணவர்களுக்கு பயிற்சிக் கையேடுகளை அளித்தும் தம் சிறப்புரையில் இப்பயிற்சியை மாணவர்கள் தங்கள் வாழ்க்கைக்குரியவாறு மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தமிழை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் பொறுப்பு இந்த தலைமுறை மாணவர்களுக்கு உள்ளது என்றும் பண்பாடு என்பது ஒரு மனிதனை இயக்கக்கூடியது என்றும் அப்பண்பாடு மொழி, கலை, சமுதாயப் பழக்க வழக்கங்கள், விழுமியங்கள் என நான்கு கூறுகளைக் கொண்டது என்றும் தெரிவித்தார். மேலும் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை ஒரு பண்பாட்டுப் பயிற்சிப் பட்டறை என்றும் இன்றைய நிலையில் உலகத்தில் அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடியது பண்பாடு சார்ந்த படைப்புத் தொழில்களே என்றும் பன்னாட்டு நிறுவனங்களில் ஆட்களைத் தெரிவு செய்வதற்கு KASH என்பதைப் பின்பற்றுகின்றனர். அதாவது knowledge–அறிவு, Attitude–பண்பு, Skill–திறமை, Habits–பழக்கவழக்கம். இவ்வகையில் மாணவர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பயிற்சியால் உங்களை நீங்களே செதுக்கிக் கொள்ள ஒரு வாய்ப்பாக்கிக் கொண்டு தாமாகவே படைக்கும் திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாணவர்களை வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சிக்கு எழுச்சிப் பாவலர் மருது அழகுராஜ், அகர முதலித்திட்ட இயக்குநர் முனைவர் கோ.செழியன், தலைமைச் செயலக மொழிபெயர்ப்புத்துறை இயக்குநர் முனைவர் ந.அருள், சென்னைப்

பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் ஒப்பிலா மதிவாணன் ஆகியோர் வாழ்த்துரையும் வழங்கினர். முன்னதாக தமிழ் வளர்ச்சி இயக்குநர் மற்றும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர்(பொறுப்பு) முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் வரவேற்புரையும் நிறைவாக தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்(நிருவாகம்) திரு.ம.சி.தியாகராசன் அவர்கள் நன்றியுரையும் ஆற்றினர்.

இலக்கியப் பட்டறையின் முதல் நிகழ்வாக கவிஞர் மருது அழகுராஜ் அவர்கள் பொன்மனச்செம்மல் எனும் தலைப்பில் மாணவர்களுக்குச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். அதனைத் தொடர்ந்து கீழ்க்காணும் அறிஞர் பெருமக்களால் சிறப்புரை / கலை நிகழ்ச்சிகள் ஒரு வார காலம் நிகழ்த்தப்படும்.

| நாள் | தலைப்பு | சிறப்புரை / கலை நிகழ்ச்சி நடத்தும் அறிஞர் பெருமக்கள் |
|---|---|---|
| 23.10.2017 | **இதழியல்,பதிப்பியல் நுட்பங்கள்** | திரு. பத்ரிசேசாத்திரி |
| | **தமிழ் அறிவோம்** | புலவர் வெற்றியழகன் |
| | **பழந்தமிழர் வாழ்வியலில் தமிழ் மருத்துவம்** | சித்த மருத்துவர் பாக்கம் தமிழன் (பிரதாபசிம்மன்) |
| | **திருமந்திரமும் வாழ்வியலும்** | முனைவர் கலாநிதி |
| | **நாதசுரம்** | திரு.திருமூர்த்தி |
| | | |
| 24.10.2017 | **இணையத் தமிழ்** | முனைவர் துரை. மணிகண்டன் |
| | **கணினித் திரையிசை** | திரு. மதன் கார்க்கி |
| | **இலக்கியத்தில் தாவரம்** | முனைவர் பஞ்சவர்ணம் |
| | **திருக்குறளில் நவரசம்** | முனைவர் வீ. சேதுராமலிங்கம் |
| | **எங்கும் தமிழ், எதிலும் தமிழ், என்றும் தமிழ்** | முனைவர் ப. சிவராஜ் |
| | **வில்லுப்பாட்டு** | சிவகாசி காந்திமதி குழுவினர் |
| | | |
| 25.10.2017 | **சிரித்து வாழ வேண்டும்** | சுவாமி சிரிப்பானந்தா |
| | **சிரித்து வாழ வேண்டும்** | திரு. ஜா.ச. சந்தானம் |
| | **மின்னிதழ்** | தேனி மு. சுப்பிரமணி |
| | **கிருத்துவமும் தமிழும்** | பேரா. டேவிட்பிரபாகர் |
| | **மேடைத் தமிழ்** | முனைவர் கு. ஞானசம்பந்தன் |
| | **கரகாட்டம்** | தேன்மொழி இராசேந்திரன், தஞ்சாவூர் |
| | | |
| 26.10.2017 | **இன்பத்தமிழ் வளர்த்த இசுலாம்** | கவிமாமணி அப்துல்காதர் |
| | **வாசிப்பும் நேசிப்பும்** | கவிஞர் வெண்ணிலா |
| | **தமிழர்களின் மரபு கட்டடக்கலை (ம) சிற்பக்கலை** | முனைவர் ஜெ. இராசேந்திரன் |
| | **தன்னம்பிக்கையே தமிழிலக்கியம்** | முனைவர் உலகநாயகி பழனி |
| | **கண்ணதாசன் ஒரு காவியம்** | முனைவர் உமையாள் முத்து |

| | | |
|---|---|---|
| | **தெருக்கூத்து** | புரிசை சுப்ரமணிய தம்பிரான் |
| | | |
| 27.10.2017 | **சட்டத் தமிழ்** | வழக்கறிஞர்இராமலிங்கம் |
| | **தமிழர் கலை (ம) பண்பாடு** | முனைவர் குணசேகரன் |
| | **ஆட்சித்தமிழ் வரலாறு ஒரு பார்வை** | முனைவர் ஒப்பிலா மதிவாணன் |
| | **பரதக் கலையே தமிழ்க் கலை** | முனைவர் புஷ்பவனம் குப்புசாமி |
| | **மண்ணிசையே தமிழ் இசை** | முனைவர் அனிதா குப்புசாமி |
| | **காவடியாட்டம்** | கலைமாமணி சோலை எஸ். நடராசன் குழுவினர் |
| | | |
| 28.10.2017 | **கம்பன் கண்ட கன்னித் தமிழ்** | முனைவர் பாலரமணி |
| | **ஊடகத் தமிழ்** | முனைவர் ஆண்டாள் பிரியதர்ஷினி |
| | **விக்கிப்பீடியாவில் தமிழ்** | திரு. இரவிசங்கர் |
| | **கணினித் தமிழ் வளர்ச்சி** | முனைவர் ந. தெய்வசுந்தரம் |
| | **உலகப் பொருளாதாரத்தில் தமிழர்களின் பங்களிப்பு** | திரு. ஆறுமுகம் |
| | **தோற்பாவை கூத்து** | கலைமாமணி பரமசிவராவ் கன்னியாகுமரி |
| | | |
| 29.10.2017 | **பண்பாளர் புரட்சித்தலைவர்** | கலைமாமணி இராசேசு |
| | **கம்பனில் திரைக்கதை** | திரு. ஆர்.வி. உதயகுமார் |
| | **மொழிபெயர்ப்புக்கலை** | முனைவர் ந.அருள் |
| | **பரதநாட்டியம்** | 1. திருமதி இலட்சுமி குழுவினர்(ம)<br>2. மயூரி நாட்டியப் பள்ளி |
| | | |

பயிற்சிப்பட்டறை நிறைவு நாளன்று கலந்துகொண்ட மாணவர்களுக்கு பங்கேற்புச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பிக்கப்பெறும்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**